මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
MINISTRY OF FINANCE AND MASS MEDIA

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය - මුදල් / அலுவலகம் - நிதி / Office - Finance: (+94)-11-2484500, (+94)-11-2484600, (+94)-11-2484700
ෆැක්ස් - මුදල් / பெக்ஸ் - நிதி / Fax - Finance: (+94)-11-2449823
කාර්යාලය - ජනමාධ්‍ය / அலுவலகம் - வெகுசன ஊடக / Office - Mass Media: (+94)-11-2513459, (+94)-11-2513498, (+94)-11-2512324
ෆැක්ස් - ජනමාධ්‍ය / பெக்ஸ் - வெகுசன ஊடக / Fax - Mass Media: (+94)-11-2513458
වෙබ් අඩවි / வெப் சைட்கள் / Websites: www.treasury.gov.lk, www.media.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/4/1/2/2018
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2017.07.25

**தேசிய வரவுசெலவுத்திட்டச் சுற்றறிக்கை இல: 2/2017**

தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
பொதுத் திறைசேரி
கொழும்பு 01

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலவர்கள் அனைவருக்கும்

**வரவு செலவுதிட்ட அழைப்பு - 2018**
**வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களும் பணிப்புரைகளும்**

2017.07.04 ஆந் திகதிய அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, 2018 ஆம் வருடத்திற்கான வரவுசெலவுத்திட்டத் தயாரிப்பானது, அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு இடைவிடாது சீராக வள ஒதுக்கீடுகளை மேற்கொள்கின்ற அதேவேளை, தற்பொழுது செயற்படுத்தப்படும் மூலதனக் கருத்திட்டங்கள் மற்றும் புதிய முதலீடுகளை துரிதப்படுத்துவதுடன் ஒத்துழைப்பினையும் வழங்கும் வகையில் பேரண்ட அரசிறை வேலைச்சட்டகத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

வரவு செலவுத்திட்டச் செயன்முறைக்கு நடுத்தரக் கால எண்ணக்கருவினை அறிமுகப்படுத்துவதானது, அதனை மேலும் உபாயரீதியாக மாற்றுவதுடன் அரசாங்கத்தின் முன்னுரிமைகளுக்கும் முக்கியத்துவம் வழங்குகின்றது. இதற்கமைவாக, வரவுசெலவு திட்ட செயன்முறையானது நடுத்தர கால பேரண்ட அரசிறை வேலைச் சட்டகத்திற்குள் மதிப்பீடு செய்யப்பட்ட வளங்களின் கிடைப்பனவுடன் தொடர்புபடுவதுடன் அரசிறைக் கொள்கை முன்னுரிமைகளுக்கான வழிகாட்டல்களையும் வழங்குகின்றது. இதனால் அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுடன் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளை மீள் ஒழுங்குபடுத்துவதுடன் வரவுசெலவு திட்டத்தினை செயற்படுத்துவதில் நிதிசார் ஒழுங்குகளும் உறுதிப்படுத்தப்படும்.

அதேவேளை, வரவுசெலவுத்திட்டத் தயாரிப்பு தொடர்பான விரிவான நோக்கமானது 2030 ஆம் ஆண்டளவில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை (Sustainable Development Goals) அடைந்து கொள்வதன்பால் நகர்வதற்கான அவசியத்தை கொண்டுள்ளது. (2015 இல் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகளின் பட்டியலினை **பின்னிணைப்பு I** இல் பார்க்கவும்.)

## 02. நடுத்தரகால பேரண்ட அரசிறை வேலைச்சட்டகம்

மீண்டெழும் செலவினங்களைக் குறைத்தல் மற்றும் மூலதனச் செலவினங்களுக்கு முன்னுரிமை வழங்குதல் என்பவற்றுடன் 2020 ஆம் ஆண்டளவில் அரசாங்கத்தின் அரசிறை வளர்ச்சிக்கான தூர நோக்குடன் அரசாங்கத்தின் வருமானத்தினை அதிகரிக்கும் வகையில் 2018 - 2020 ஆம் ஆண்டுகளுக்கான நடுத்தர கால பேரண்ட அரசிறை வேலைச்சட்டகத்தின் பண்புகள் பின்வருமாறு காணப்படும்.

i. அரசாங்க வருமானம் மொ.உ. உற்பத்தியில் 16.5 சதவீதமாக இருத்தல்
ii. அரசாங்க மீண்டெழும் செலவினம் மொ.உ. உற்பத்தியில் 14.8 சதவீதமாக இருத்தல்
iii. அரசாங்க பொது முதலீடு மொ.உ. உற்பத்தியில் 5.3 சதவீதமாக இருத்தல்
iv. வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை மொ.உ. உற்பத்தியில் 3.5 சதவீதமாக இருத்தல்
v. அரசாங்க படுகடன் நிலுவை மொ.உ. உற்பத்தியில் ஏறக்குறைய 70 சதவீதமாக இருத்தல்

அரசாங்க நிதி முகாமைத்துவத்தின் செயலாற்றுகையில் அத்தகைய முன்னேற்றமானது நடுத்தரகால பொருளாதார வளர்ச்சியினை ஏறக்குறைய 6-7 சதவீதமாக அதிகரிக்கச் செய்யும் அதேவேளை, பணவீக்கமானது மத்திய ஒற்றை இலக்க மட்டத்தில் தொடர்ந்திருக்கும்.

2018 இல் பேரண்டப் பொருளாதார ஊகங்களுக்கு மத்தியில் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 6 சதவீத வளர்ச்சி, பணவீக்கம் 5 சதவீத மட்டத்தில் தொடர்ந்திருத்தல், ஆரம்ப பற்றாக்குறையானது மொ.உ. உற்பத்தியில் 1.2 சதவீதமாக காணப்படும் அதேவேளை மொத்த வரவுசெலவு திட்ட பற்றாக்குறையானது மொ.உ. உற்பத்தியில் 4.3 சதவீதமாகக் காணப்படுதல் என்பனவும் உள்ளடங்கும்.

## 03. செயலாற்றுகை அடிப்படை வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு அணுகுமுறை

எதிர்வரும் வருடங்களில் பொது நிதி முகாமைத்துவத்தில் எதிர்நோக்கும் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கும் நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியினை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஒவ்வொரு வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டினதும் வினைத்திறன்மிக்க மற்றும் பயன்வலுவான செலவினத்தினை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவத்தினையும் கவனத்திற் கொண்டு செயலாற்றுகையினை அடிப்படையாகக் கொண்ட வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு அணுகுமுறையின் (Performance Based Budgeting Approach) அடிப்படையில் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்படுவதுடன் கடந்த வருடத்தில் அமுல்படுத்தப்பட்ட பூச்சிய அடிப்படை வரவு செலவுத்தயாரிப்பு அனுபவங்களைக் கொண்டு இச்செயன்முறை முன்னெடுக்கப்படும். 2016 மற்றும் 2017 அரசிறை வருடங்களில் பின்பற்றப்பட்ட பூச்சிய அடிப்படை வரவு செலவுத்திட்டத் தயாரிப்பானது கிரமமான மாற்றமொன்றாக நடுத்தரகாலத்தின்போது செயலாற்றுகையினை

அடிப்படையாகக் கொண்ட வரவு செலவுத்திட்டத் தயாரிப்பினை நோக்கி படிப்படியாக நகர்வது உறுதிப்படுத்தப்படும்.

## 04. இறுதி விளைவுக்கு பொறுத்தமான பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் (KPIs)

விசேடமாக வரையறை செய்யப்பட்ட அளவீடு செய்ய முடியுமான விளைவுகளை அடைந்து கொள்வதற்கு செயலாற்றுகை அடிப்படை வரவு செலவுத்திட்ட தயாரிப்பானது வளங்களை ஒதுக்கீடு செய்யும். எனவே, அரசிறை வருடத்திற்கு பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளின் வரைவிலக்கணத்தினை செயலாற்றுகை அடிப்படை வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு வேண்டி நிற்பதுடன் அத்தகைய பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளினை வள ஒதுக்கீடு செய்வதற்கான இணைப்பானது முழு வரவு செலவுத்திட்டச் செயன்முறையின் முக்கிய பகுதியாக காணப்படுகின்றது. எனவே, கருத்திட்டத்தின் நோக்கெல்லையினை இனங்காணுதல், அளவீடு செய்ய முடியுமான விளைவுகளை வரையறை செய்தல் மற்றும் கருத்திட்டத்தின் சமூக பொருளாதார தாக்கத்தினை மதிப்பீடு செய்தல் என்பன செயலாற்றுகை அடிப்படை வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு அணுகுமுறையின் பிரதான கூறுகளாகக் காணப்படும்.

## 05. மூலதனச் செலவினப் பயன்பாடு

2016 மற்றும் 2017 இன் இன்றுவரையான காலப்பகுதியில் செலவின முகவராண்மைகளினால் மூலதனச் செலவினப் பயன்பாடு கணிசமான அளவு குறைவாகக் காணப்பட்டதுடன் பொது நிதி முகாமைத்துவத்தில் இலக்காகக் குறிப்பிடப்பட்ட சமூகப் பொருளாதார அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதில் கட்டுப்பாடுகளும் காணப்பட்டன. மூலதனச் செலவினப் பயன்பாட்டின் குறைந்த விகிதமானது கொள்ளளவு வரையறைகள், பெறுகை தாமதங்கள் மற்றும் புதிதாக ஒப்படைக்கப்பட்ட கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஆயத்தமின்மை போன்றன காரணங்களாக அமைவதுடன் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படாத அத்தகைய பொதுச் செலவினங்கள் பொதுச் செலவின முகாமைத்துவத்தின் நோக்கங்களை பின்னடையச் செய்யமுடியும். இதனால் நாட்டில் சமூகப் பொருளாதார வளர்ச்சியானது தடைப்படுகின்றது.

## 06. வள ஒதுக்கீட்டுக் கொள்கைகள்

(I) "2017 ஆம் ஆண்டு வறுமை ஒழிப்பு வருடம்" என அதிமேதகு சனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டவாறு அரசாங்கத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகக் காணப்படுவது வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்துவதாகும். இதற்கமைவாக வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கின்ற அதேவேளை, இந்நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு பல்வேறு நிரல் அமைச்சுக்களினூடாக 2017 இல் ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. குறிப்பாக மொனராகலை, முல்லைத்தீவு போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் விசேடமாக இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகையில் நிரல் அமைச்சுக்களின் செயலாளர்கள் அனைவரும் தமது செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களுக்குள் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(II) நடுத்தரகாலத்தின்போது சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கான மிக முக்கிய துறைகளான கல்வி மற்றும் சுகாதாரம் என்பன அரசாங்கத்தினால் இனங்காணப்பட்டுள்ளது. தனியார் மற்றும் அரசாங்கத்துறைகளின் மூலம் நாட்டில் கல்விக்கான முதலீடு 2020 அளவில் மொ.உ உற்பத்தியில் 6 சதவீதத்தினை அடையுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது இத்துறையில் செலவின உள்ளீட்டுக்கான ஆற்றலினை குறிப்பிடத்தக்களவு விரிவுபடுத்துவதற்கான தேவையினை ஏற்படுத்தியுள்ளது. கல்வி மற்றும் சுகாதார துறைகள் தனியார் துறையிலிருந்தும் அதிகளவான கரிசனையினை கவர்ந்துள்ளது. இதற்கமைவாக இத்துறைகளில் அரச தனியார் பங்களிப்பு முறைமையின் மூலம் அரசாங்கம் அதனது செலவினத்தினை அதிகரிக்கும்.

கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளின் தரத்தினை மேம்படுத்துவதனை கல்விக்கான முதலீடானது இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். கல்வித்துறையில் முழு மொத்த தரமேம்பாடானது நீண்டகாலமாக முன்னெடுக்கப்படாத ஒரு விடயமாகக் காணப்படுகின்றன. எனவே, கற்பித்தல் முறைமைகள் சாதனங்கள் மற்றும் சூழல் அத்துடன் ஏனைய தொடர்புடைய அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. முதலீட்டினை முடிவுகளுடன் (Outcome) தொடர்புபடுத்திய முன்னேற்றகரமான கல்வித் தரத்திற்கான உபாயங்களை வகுப்பது கல்வித்துறையின் தேவையாகும். இப்பின்னணியில் முன்னேற்றமடைந்த மற்றும் விளைவினை ஏற்படுத்தக்கூடிய சேவை வழங்கலுக்காக கல்வித் துறையில் மறுசீரமைப்பினை இலக்காகக் கொண்டு 2018 இல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

2018 வரவு செலவுத்திட்டத்தில் நாடுதழுவிய ரீதியில் சுகாதாரத் துறையில் நோய்த்தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு அதிக கவனம் செலுத்தப்படவேண்டியுள்ளது. இதன் அடிப்படையில் நோய்க்கட்டுப்பாடு மற்றும் நோய்த் தடுப்பினை அடிப்படையாகக் கொண்டு சுகாதாரப் பராமரிப்பினை மேம்படுத்தல் மற்றும் ஆரோக்கியம் மிக்க வாழ்க்கை முறைக்கு ஏற்ற வகையில் சமூகத்தினை வலுவூட்டுவதன் மூலம் தொற்றாத நோய்களின் பரவுதலைக் குறைப்பதற்கான கொள்கைகளை செயற்படுத்துவதற்கு வசதியளிப்பதற்கு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மேலும், அரசாங்க நிதிப் பயன்பாட்டில் மிகவும் செலவு குறைந்த மறுசீரமைப்புகளை சுகாதாரத்துறை முன்னெடுத்தல் வேண்டும்.

சுகாதாரத்துறை முதலீட்டு ஆற்றலானது சிறந்த முடிவுகள் கிடைப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் முன்னேற்றப்படுதல் வேண்டும். தற்பொழுது தொற்றாத நோய்கள் தொற்றுநோய்களைவிட அதிகரித்துக் காணப்படுவதுடன் சுகாதாரத்துறையில் பாரிய பிரச்சனைகளையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே, டெங்கு பரவுகை போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காணுகின்ற அதேவேளை, தொற்றல்லாத நோய்களின் அதிகரிப்புப் போக்கினையும் சமாளிப்பதற்கு அதிக கவனம் செலுத்துதல் வேண்டும்.

(III) எதிர்பார்க்கப்படும் வளர்ச்சிப் போக்கினை ஏற்படுத்துவதற்கு இலங்கை துரித உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஒன்றன்பால் தேவையுடையதாகவுள்ளது. எனவே, அரசாங்கம் உட்கட்டமைப்பு மீதான முதலீடுகளை அதிகரிப்பதற்கு விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் பெரும்பாலான கருத்திட்டங்கள் அரச தனியார் பங்களிப்பு முறைமையில் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. குறிப்பாக நகரமயமாக்கல், ஆதன அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் பேட்டைகளை தாபித்தல் என்பவற்றின் அதிகரிப்புடன் ஏனைய பயன்பாட்டு சேவைகளுடன் மின்சாரத்திற்கான கேள்வி துரிதமாக அதிகரிக்க முடியும். எனவே, நகரத்துறையில் உட்கட்டமைப்புக்கான கேள்வி

அதிகரிப்பினை ஈடு செய்யும் வகையில் தனியார் அரசாங்க பங்குடமை அடிப்படையில் தனியார் துறையின் பங்குபற்றுதலுடன் நிதித்தேவை முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

(IV) புத்தாக்கங்கள், தொழில் உருவாக்கம் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளினை இலக்காகக் கொண்ட இலகுக் கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறையானது வலுப்படுத்தப்படும்.

**07. 2018 இற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள்**

கடந்த வருடங்களில் மூலதனச் செலவினப் பயன்பாடு போதியளவு காணப்படவில்லை என்ற நிலைக்கு மாற்றமாக 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் மிகவும் யதார்த்த பூர்வமான முறையொன்றில் மேற்கொள்ளப்படும். எனவே, அனைத்து செலவின முகவராண்மைகளும் செலவின மதிப்பீடுகளை சமர்ப்பிப்பதற்கு முன்னர் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றவேண்டுமென கேட்கப்படுகின்றனர்.

(i) ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் அளவீடு செய்ய முடியுமான முடிவுகள் இனங்காணப்பட வேண்டுமென்ற தேவையினை பிரதான செயலாற்றுகை குறிகாட்டி கொண்டுள்ள தற்பொழுது செயற்படுத்தப்பட்டுவரும் மற்றும் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ii) தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்ட புதிய மூலதன செலவினக் கருத்திட்டங்கள் மற்றும் செயற்படுத்தப்பட்டுவருவதுடன் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் வரைவு செலவின மதிப்பீடுகளில் குறித்த கருத்திட்டங்கள் சேர்த்துக் கொள்ளப்பட முடியுமாக இருத்தல் வேண்டும்.

(iii) இதற்கு மேலதிகமாக, தேசியரீதியில் முக்கியத்துவம் பெறுவதுடன் அவசர கவனம் செலுத்த வேண்டியதுமான ஏதேனும் கருத்திட்டங்கள் காணப்படுமாயின் அவை வரைவு செலவின மதிப்பீடுகளில் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், நிதி ஒதுக்கீடுகள் 2018 இற்கான கிடைப்பனவு வளங்களினை கவனத்திற் கொண்டு மேற்கொள்ளப்படும். அவற்றுள் பின்வரும் புதிய மூலதன செலவின கருத்திட்டங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

(அ) பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதி உற்பத்திகளின் அதிகரிப்பு
(ஆ) கழிவு முகாமைத்துவம்
(இ) இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்.
(ஈ) நகர மற்றும் கிராமியப் பிரதேசங்களில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி
(உ) சுற்றுலாத் துறைகளுடன் தொடர்பான தொழில்களை ஊக்குவித்தல்

மேற்குறித்த முன்னுரிமைகள் சமூகப் பொருளாதார தேவைகள் அதேபோன்று நடுத்தர காலத்திலிருந்து நீண்டகால பொருளாதார அபிவிருத்தி நோக்கங்கள் என்பவற்றினை கவனத்திற் கொண்டு அத்தகைய முன்னுரிமைகள் வழங்கப்படும். மேலும் மூலதன முதலீட்டிலிருந்து நன்மை கிடைப்பதற்கு எடுக்கின்ற கால அவகாசத்திற்கும் (கருத்தமைவுக் காலம்) முக்கியத்துவம் வழங்கப்படும். கருத்திட்டங்களின் மிகச் சமநிலையான கலப்பானது குறிகியகாலம் மற்றும் நடுத்தரத்திலிருந்து நீண்டகாலத்திற்கு பயனளிப்பதுடன் அரசாங்கத்தினது காசுப்பாய்ச்சல் முகாமைத்துவத்தினை ஸ்திரப்படுத்துவதுடன் பொது நிதி முகாமைத்துவத்தின் நிலைபேறான தன்மையினை அதிகரிக்கும்.

## 08. செலவின மதிப்பீடுகளை சமா்ப்பித்தல்

அனைத்து பின்னிணைப்புகளுடன் முறையாகத் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் பிரதிகளை தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு **2017 ஆகஸ்ட் 04** ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னா் சமா்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீா்கள். இதற்கு மேலதிகமாக இந்த ஆவணங்களின் மென் பிரதியினை தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் உரிய பதவிநிலை அலுவலருக்கு மின்னஞ்சல் மூலம் சமா்ப்பித்தல் வேண்டும். செலவின முகவராண்மையுடனான கலந்துரையாடல் செயன்முறையானது 2017 ஆகஸ்ட் இரண்டாம் வாரத்திலிருந்து ஆரம்பமாகும்.

## 09. அரசாங்க அலுவலா் முற்பணக் கணக்குகள்

அரசாங்க அலுவலா்கள் முற்பணக் கணக்குகளுக்கான மதிப்பீடுகள் **பின்னிணைப்பு II** இல் வழங்கப்பட்ட படிவத்திற்கமைவாக சமா்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## 10. தெளிவுபடுத்தல்கள்

மேலதிக விபரங்கள் மற்றும் தெளிவுபடுத்தலுக்காக உங்களது அமைச்சு /திணைக்களம்/நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் உரிய அலுவலரினை தயவு செய்து தொடா்பு கொள்ளவும்.

**ஒப்பம்/ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் அதிபதி

பின்னிணைப்பு I

## நிலையான அபிவிருத்தி இலக்குகள்

புதிய நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றாக அனைத்து தரப்பினருக்கும் சுபீட்சத்தினை உறுதிப்படுத்துவதுடன் வறுமையினை முடிவுறுத்தல், பூகோளத்தினை பாதுகாத்தல் போன்ற இலக்குகளை 2015 செப்ரெம்பர் 25 ஆந் திகதி அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொண்டன. ஒவ்வொரு இலக்குகளும் அடுத்த 15 வருடங்களில் அடைய முடியுமான குறிப்பிடத்தக்க குறிக்கோள்களை கொண்டுள்ளது. இந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அரசாங்கங்கள், தனியார்துறையினர், சிவில் சமூகத்தின் மற்றம் அனைத்து பிரசைகளும் தமது பங்களிப்பினை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலக்கு 1: வறுமையின்மை

இலக்கு 2: பூச்சிய பட்டினி

இலக்கு 3: சிறந்த சுகாதாரம் மற்றும் நலன்

இலக்கு 4: தரமான கல்வி

இலக்கு 5: பால் சமநிலை

இலக்கு 6: சுத்தமான நீர் மற்றும் துப்பரவேற்பாடு

இலக்கு 7: மலிவான மற்றும் தூய சக்தி

இலக்கு 8: கௌரவமான தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சி

இலக்கு 9: கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு

இலக்கு 10: குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள்

இலக்கு 11: நிலையான நகரங்கள் மற்றும் சமுதாயங்கள்

இலக்கு 12: பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி

இலக்கு 13: காலநிலை செயற்பாடுகள்

இலக்கு 14: நீரின்கீழ் வாழ்க்கை

இலக்கு 15: நிலத்தில் வாழ்க்கை

இலக்கு 16: சமாதானம், நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள்

இலக்கு 17: இலக்குகளுக்கான பங்குடமைகள்

பின்னிணைப்பு II

அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்குகளுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2018

1. அமைச்சின் / திணைக்களத்தின் பெயர் :- ……………………………………………

2. செலவின தலைப்பு இல. :- ………………………………………………………...

3. 2017 யூன் சம்பள விபரங்களுக்கு அமைவாக:-

   i. பண்டிகை முற்பணம் பெறுவதற்கு உரித்துடைய அலுவலர் எண்ணிக்கை :-……….
   ii. விசேட முற்பணம் பெறுவதற்கு உரித்துடைய அலுவலர் எண்ணிக்கை :-................
   iii. இடர் கடன் பெறுவதற்கு உரித்துடைய அலுவலர் எண்ணிக்கை :-...........................
   iv. 2017 யூன் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட தவணைக் கட்டண தொகை :-………....
   v. 2017 யூன் மாதத்திற்கான சம்பளங்களின் செலவினம் :-.......................................
   (செலவின குறியீட்டு இல 1001 இற்கு அமைவாக)

4. 2018 சனவரிக்கான மதிப்பிடப்பட்ட சம்பளம் - 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்திற்கு அமைவாக (செலவின குறியீட்டு இல 1001 இற்கு அமைவாக)

5. 2016 ஆண்டிற்கான அரசாங்க அலுவலர் முற்பணக்கணக்கு இணக்கக்கூற்றுக்கு அமைவாக:-

   i. மொத்தச் செலவினம் :-.......................................
   ii. மொத்தப் பெறுகை :-.........................................
   iii. டிசெம்பர் 31 படுகடன் மீதி :-.........................................

6. 2018 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரையறைகள் :-

   i. ஆகக் கூடிய செலவின வரையறை :-.............................
   ii. ஆகக் குறைந்த பெறுகை வரையறை :-..........................
   iii. ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை :-........................

திகதி :-.....................

……………….……………………
நிறுவனத் தலைவரின் கையொப்பம்